12 1991
பகுதி

# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 117 இதழ் : 16 13–09–1991 ( செப். 13—செப். 27 ) இலங்கையின் ஓரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு· விலை ரூபா 3-50

### இளைஞர் தினம்

ஆறாவது உகை இளைஞர் தினம் சென்ற 15ஆம் திகதி போலந்தில் யான்சா கோராவில் நடைபெற்ற போது திருத்தந்தை கூடியிருந்த பத்து லட்சம் இளைஞர்களையும் '' ஐரோப்பாவின் எதிர்காலத்துக்காக ஒற்றுமையை நாடுங்கள் '' என்றார்.

## திருவழிபாடு பண்பாட்டுமயமாக்கப்படவேண்டுமா என்ற சூடான வாதம் பட்டிமன்றத்தில்

# பல்சுவை அம்சங்கள் கொண்ட கண்காட்சிக்கு

# பல்லாயிரக்கணக்கானமக்கள் அணிதிரண்டனர்

**யாழ் மறைவட்ட வழிபாட்டு நிலையத்தினர் இம்மாதம் 5, 6, 7ஆம் திகதிகள் ஒழுங்கு செய்திருந்த "வாழ்வும் வழிபாடும்" என்ற திருவழிபாட்டுக் கண்காட்சியைப் பார்க்க வந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்களும், பொதுமக்களும் பல்சுவை அம்சங்களைக் கண்டு களித்து இன்புற்றனர்.**

இம்மாதம் 5, 6, 7 ஆம் திகதிகளில் யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் அமைந்துள்ள திருவழிபாட்டு நிலையத்தினர் ஒழுங்கு செய்த கண்காட்சியை யாழ். ஆயர் பேரருள்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் மங்கள விளக்கு ஏற்றி ஆரம்பித்துவைத்தார்.

இயக்குனர் அருள்திரு யே. நீக்கிலஸ் அடிகள் யாழ் மறைவட்டப் பங்குகளிலிருந்து 130 உதவியாளர்களின் துணை கொண்டு ஒழுங்கு செய்த கண்காட்சிகளில் பொம்மைக்காட்சி, அஞ்சலி நடனம், நேர்முகப் பேட்டி, பட்டிமன்றம், வினா விடைப்போட்டி, புத்தகவிற்பனை போன்ற பலஅம்சங்கள் இடம் பெற்றன.

கண்காட்சியில், திருவழிபாடு, திருவருட்சாதனங்கள் பற்றிய விளக்கங்கள் முதன்மை பெற்றன. ஓவியங்களைப் பல பங்குகளும், பாடசாலை மாணவர்களும் படைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

திருவழிபாடு பண்பாட்டுமயமாக்கப்படவேண்டுமா என்ற சூடான வாதம் இறுதி நாள் பட்டி மன்றத்தின்போது இடம் பெற்றது.

## பிலிப்பைன் ஆயர்கள் கவலை


தமது அரையாண்டுக் கூட்டத்திற்காக தகேத்தே நகரில் கடந்த ஜூலை 15 ஆம் திகதி ஒன்று கூடிய பிலிப்பைன் ஆயர்கள் இயற்கை அழிவுகளாலும் அரசாங்கத்தின் சமூக பொருளாதாரக் கொள்கைகளினாலும் நாட்டில் அதிகரித்துவரும் வறுமைநிலை பற்றிகவலை தெரிவித்தனர்.

ஏழைகளின் வாழ்க்கைக்குத் தேவையான எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைக்க முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

பம்பங்கா மறைமாவட்டத்தின் பேராயர் பசியானோ பெர்னான்டோ தமது மறை மாவட்டத்தில் மட்டும் 40,000 தொழிலாளர் எரிமலை வெடிப்பினால் வேலையிழந்து இருக்கின்றனரென்றும், ஏராளமான விளைச்சல் நிலங்களும், தனியார் உடைமைகளும் அழிந்து போய் விட்டன என்றும் குறிப்பிட்டார். ஒவ்வொரு மறை மாவட்டமும் இன்னலுற்றிருக்கும் இப்பங்குளில் ஒன்றை எடுத்து புனர்வாழ்வளிக்க வேண்டும் என்ற திட்டத்தை ஆயர் பேரவை ஏற்றுக் கொண்டது.

## தேவத்தையில் யாழ் ஆயர் மறையுரை

கொழும்பு மறை மாவட்ட புதிய துணை ஆயர் பேரருள் திரு அல்பேட் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் சென்ற 31ஆம் திகதி தேவத்தையில் ஆயராகத் திருநிலைப் படுத்தப் பட்டபோது மறையுரை ஆற்றிய யாழ். ஆயர் பேரருள் திரு வ. தியோகுப் பிள்ளை ஆண்டகை அவர்கள், ''திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பரால் ஆயராகத் தெரிந்தெடுக்கப்பட்ட அதிவண. மல்கம் ரஞ்சித் அவர்களை உரோமை ஆயருடன் ஐக்கியமாகவுள்ள இலங்கை ஆயர்கள் ஆயராகத் திருநிலைப்படுத்தவுள்ளனர்'' என எடுத்தியம்பினார்.



ஆயர் தமது மறையுரையில் தந்தையாகிய இறைவன் தம் திருமகனை மீட்பராக உலகிற்கு அனுப்பினார் என்றும் கிறிஸ்துவே உலகின் ஆசிரியரும் குருவும் ஆயரும் ஆவார் என்றும் கிறிஸ்து தமது பணியைத் தொடர்ந்தாற்ற பன்னிரு அப்போஸ்தலரைத் தெரிந்தெடுத்து அவர்களிடம் தமது பணியை அவர் ஒப்புவித்தார் என்றும், இராயப்பரை அவர்களுக்குத் தலைவராக்கினார் என்றும் இராயப்பரின் வழித் தோன்றலாகிய திருத்தந்தை கிறிஸ்துவின் மூவித பணியைத் தொடர புதிய துணை ஆயரைத் தெரிந்துள்ளார் என்றும், இலங்கை ஆயர்கள் உரோமை ஆயருடன் இணைந்து புதிய ஆயரை அபிஷேகம் செய்வதாகவும் விளக்கினார்.

## தேசியபேராளர் மாநாடு

### கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் (ஸ்ரீலங்கா)

நமது நாட்டைப் பொறுத்த மட்டில், கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் ஒரு சிறு அலையாகத் தோன்றினாலும், சர்வதேச அரங்கில் எழுபது நாடுகளின் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட பாரிய இயக்கமாகும்.

பொது நிலையினராகிய தொழிலாளர்கள் தமது அப்போஸ்தலிக்க பணியை முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை தமது உரிமைகளுக்கு குரல்கொடுக்க ஒவ்வொரு தொழிலாளியையும் பயிலுவிக்கும் ஒரு இயக்கமாகவும் கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் விளங்குகின்றது.

இவ்வாறு கடந்த 2ஆம் திகதி முதல் 4–8–91வரை மினுவன் கொட அ, ம. தி. தியான மண்டபத்தில் நடைபெற்ற இறுதிநாள் தேசிய பேராளர் மாநாட்டின் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த பொது நிலையினர்களின். ஆன்ம அத்தியட்சகர் அருட்திரு. P. P. ரூபசிங்க அடிகளார் குறிப்பிட்டார்கள்.

திரு. மஞ்சநாயக்க ஜோசப் அந்தனி தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய அடிகளார் ''பொதுநிலையினராகிய தொழிலாளர்களின் பணிகளைத் துறவறம் பூண்ட எங்களால் முன்னெடுத்துச் செல்ல முடியாது. ஆனால், பொதுநிலையினரான தொழிலாளர்களுக்கு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி உதவமுடியும். கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கத்தினைப் பொறுத்தமட்டில் பொதுநிலையினராகிய தொழிலாளர்களை தலைமைத்துவ பணிக்குப் பயிற்சியளிப்பதில் திறம்பட செயலாற்றி வருகின்றது. அரசியல் தொழிற்சங்க கலப்பின்றி கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கத்தின் சேவை அனைவருக்கும் தேவை என்பதை உணர்ந்து சேவையாற்றி வருகின்ற ஒரு சிறந்த இயக்கம்'' என்று தனது உரையை நிறைவு செய்தார்.

## சிறிய குருமட அனுமதி

யாழ். மறைவட்டத்தில் குருவாக பணிபுரிய சிறிய குருமடத்தில் அனுமதி பெற விரும்பும் ஆண்டு 9இல் கல்வி கற்கத் தகுதியுள்ள மாணவர்கள் பங்குத்தந்தையர் மூலம் விண்ணப்பங்களை ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கும்படி புனித மடுத்தீனார் குருமட அதிபர் கேட்டுக்கொள்கிறார்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம் கருத்து

# அர்ப்பண மனப்பான்மை

ஜூலை 15 ஆம் திகதி கொழும்பு மறைவட்ட துணை ஆயராக நியமிக்கப்பட்ட பேரருள்திரு மல்கம் ரஞ்சித் ஆண்டகை, பேராயர் இல்லத்தில் கூடியிருந்த அருள்தந்தையர்களுக்கு, ''நற்செய்திப் பணியில் புதுமை'' என்ற கருப்பொருளில் அன்றைய தினம் சொற்பெருக்காற்றினார்.

திருத்தந்தை அருள் சின்னப்பர் நற்செய்திப் பணி பற்றி கூறிய கருத்தை ஆதாரமாகக் கொண்டு ''பிறருக்கு அளிக்கப்படும்போது, விசுவாசம் வலுப் பெறுகிறது'' என்ற பதத்தை விளக்குகையில் ''ஒருவர் தமது விசுவாசத்தின்படி வாழ்ந்தாலொழிய அதை அறிவிக்க முடியாது. அது போலவே விசுவாசத்தை அறிவிப்பது, ஒருவரை அதன்படி வாழச் சவால் விடுகிறது'' என்று எடுத்துக் கூறினார்.

மறைபரப்புப் பணிக்கு அர்ப்பண மனப்பான்மை அவசியம் என்பதை வலியுறுத்திய அவர் இந்த ''அர்ப்பணமானது குருத்துவத்தின் திருவருட்சாதன இயல்பிலிருந்து மட்டும் வருவதில்லை, நாம் செய்யும் வாக்குத்தத்தங்களிலிருந்தும் வருவதில்லை. மக்களின் தேவைகளிலிருந்தும் வருவதில்லை. இவையெல்லாம் தற்செயலாக வந்த காரணிகளாகலாம். எம்மை இறைவனோடும், இறைவனை எம்மோடும் பிணைக்கும் அன்புதான் எமது அர்ப்பணத்தின் மூல காரணமும் அதனை இயக்கும் சக்தியுமாகும்'' என்றார்.

கோழை, முன்கோபி, பதவி மோகம் கொண்டவர், சந்தேகப் பிராணி போன்ற பலவித மனிதர்களைக் கொண்ட அப்போஸ்தலர் குழாம் தம்மிடம் எத்தகைய வேறுபாடுகள் இருந்த போதிலும் ஆண்டவருக்காகவும், தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணிக்காகவும் ஒன்றுபட்டு நின்றனர். ஒருவராலும் அவர்களை மேற்கொள்ள முடியவில்லை.

இத்தகைய அப்போஸ்தலர்களின் வாழ்க்கையை மேற்கோளாகக் கொண்டு குருகுலத்தார் உலகின் போக்கைக் களைந்து, திருத்தந்தை காட்டிய இலக்குகளை அடைவதற்கு முயலவேண்டும் என்றும் இல்லையேல் திருச்சபை மறைபோதகப் பணிக்கு புத்துயிரளிக்க மேற்கொள்ளும் முயற்சி பலனளிக்காது போய்விடும் என்றும் புதிய துணை ஆயராக நியமிக்கப்பட்ட பேரருள்திரு. மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் சுட்டிக்காட்டினார்.

திருச்சபை குறைபாடுள்ள மனிதர்களையே தலைவர்களாகக் கொண்டு, உறுதிப்படுத்தப்பட்டு கற்பாறையில் கட்டப்பட்டதாக நிலை நிறுத்தப் பெற்றது.

பதினாறு ஆண்டுகளாக கொழும்பு மறைமாவட்டத்தில் குருவாகப் பணியாற்றிய பேரருள் திரு மல்கம் ரஞ்சித் ஆண்டகை தமது மறைவட்டத்தினதும், குருக்களினதும் நிலைகளைத் தெளிவுபடுத்தி, மறைவட்டக் குக்கள் துறவியர்களின் அர்ப்பண மனப்பான்மையைத் தூண்டி எழுப்பியுள்ளார்,

புதிய துணை ஆயரின் கருத்துக்கள் பலருக்கு அதிர்ச்சி யூட்டுபவையாகவும், சிலருக்கு வியப்பூட்டுபவையாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய கருத்துக்கள் பல்வேறு விடயங்களை நாம் விளங்கிக் கொள்ளவும், இடறல்களைத் தடுத்துக் கொள்ளவும், இவை தொடராது பார்த்துக் கொள்ளவும் துணைபுரியும்.

குருக்கள், துறவியரின் அர்ப்பணவாழ்வு தொடர இறைமக்கள் அனைவரும் தமது செபத்தாலும். பக்கபலந்தாலும், துணைபுரிய முடியும். புதிய துணை ஆயரின் பங்களிப்பின் மூலம் அர்ப்பணிப்பு வளர வாழ்த்துவோம்.

# நற்செய்திப்பணியில் புதுமை

**1991 ஜூலை 15 ஆம் திகதி அதிமேற்றிராசனத்தின் குருகுழாமில் ஆயராகத் தெரியப்பட்ட பேரருட்திரு மல்கம் ரஞ்சித் அவர்களின் கருத்துரை.**

ஒரு புதுமையான நற்செய்திப்பணி அல்லது பத்தாண்டுகால நற்செய்திப் பணிக்கு திருத்தந்தை விடுத்த அழைப்பு பல விடங்களில் ஏற்கெனவே ஒரு எதிரொலியை ஏற்படுத்தியுள்ளது. எத்தனையோ தலத்திருச்சபைகளில் அந்த இலக்கை நோக்கி தமது சக்திகளைத் திரட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுள் முக்கியமானவை லத்தீன் அமெரிக்காவில் அண்மைக்காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மறைபரப்பு மகாநாடுகளாகும்,இவற்றின் விளைவாக திருச்சபை புத்தூக்கத்துடன் மறைபரப்புப் பணியில் ஈடுபடவேண்டியதன் அவசியத்தைப்பற்றி லத்தீன் அமெரிக்காவில் கூடிய விழிப்புணர்வு ஏற்பட்டுவருகிறது. இதில் ஒரு சுவாரஸ்யமான விடயம் என்னவெனில் இதுவரை பிற இடங்களிலிருந்து மறைபோதகரைப் பெற்றுவந்த லத்தீன் அமெரிக்கா இப்போது மறைபோதகரை வெளிநாடுகளுக்கு அனுப்ப ஆரம்பித்துள்ளது.

''பிறருக்கு அளிக்கப்படும் போது விசுவாசம் வலுப்பெறுகின்றது'' என திருத்தந்தை நன்கு கூறியுள்ளார். எனவே பகிரப்படாத அல்லது பிறருக்கு அளிக்கப்படாதபோது அது தேங்கிநின்று இறந்துபோகிறது விசுவாசம் ஓர் உயிருள்ள, ஆற்றல் வாய்ந்த, மக்கள் விரும்புகின்ற ஓர் அனுபவமாக ஆக வேண்டுமாகில் அது இடைவிடாது வாழப்படவும், அறிவிக்கப்படவும் வேண்டும், ஒருவர் தமது விசுவாசத்தின்படி வாழ்ந்தாலொழிய அதை அறிவிக்க முடியாது. அதுபோலவே விசுவாசத்தை அறிவிப்பது ஒருவரை அதன்படி வாழச் சவால்விடுகின்றது. இந்த இரண்டு உண்மைகளும் நெருங்கிய தொடர்புடையவை.

திருத்தந்தை எம்மனைவருக்கும் சவால்நிறைந்த ஒரு அழைப்பை விடுத்துள்ளார். எம்மைச் சூழவுள்ள, முக்கியமாக எமது இந்தக் கண்டத்திலுள்ள மறைபோதகப் பரப்பினை நோக்கும்போது இதுவரை சாதிக்கப்பட்டவற்றை பிட்டு நாம் அதிக திருப்தியடைய இடமில்லை. கடல் போன்ற பிறமக்கள் மத்தியில் 2.6 வீதமான கிறிஸ்தவர்களே உள்ளனர். இவர்களுட் பெரும்பாலோர் இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டது கூட இல்லை. இலங்கையிலும் நிலைமை இத்தகையதே. 2ஆம் வத்திக்கான் சங்கத்தின்பின்னர் அநேக மாற்றங்கள் நிகழ்ந்தது உண்மையே. புதிய மறைப்பணிகளையும், நாட்டில் புதிய விதங்களில் திருச்சபையின் பிரசன்னத்தையும் காணக் கூடியதாயுள்ளது. ஆனால் வேறு முக்கியமான விடயங்களில் நிலைமை திருந்தவில்லை, மாறாக மோசமாகியிருக்கிறது.

கத்தோலிக்கர் தொகை குறைந்துள்ளது, எமது மக்கள் நடுவில் அடிப்படைவாதக் குழுக்களின் ஊடுருவல் அதிகரித்துள்ளது. சமுதாயத்தில் சமயம் வகித்துவந்த இடம் சுருங்கியுள்ளது. கல்வி ஏறக்குறைய எமது செல்வாக்குக்கு முற்றும் அப்பாற்பட்டதாக இருக்கின்றது. (மறைக்கல்வி ஆகக் குறைந்த அளவிலேயே உள்ளது). மதச்சார்பு நீக்கப்பட்டு வருகிறது. எமது கத்தோலிக்கரிடத்தில் விசுவாச உணர்வும், விசுவாச சாட்சியமும் ஓரளவு அருகியுள்ளன. குருக்கள். துறவியரிடையே ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இவர்கள் நாளாந்த நிர்வாகக் கடமைகளை நிறைவேற்றுவதே தமது பணி எனப் பெரிதும் கருதத் தலைப்படுகின்றனர். இங்குள்ள எமது மத்தியிலுங்கூட ஐக்கியத்தில் ஓர் நெருக்கடி உள்ளது அது பற்றிப் பின்னர் பேசுவேன்.

ஆனால் இவையனைத்தும் ஆண்டவருக்காகவும், நற்செய்தி பரப்புவதற்காகவும் நாம் கொண்டுள்ள ஆர்வத்தை குறைத்துவிடலாகாது. அப்போஸ்தலர் பணி அதிகாரம் ஐந்திலுள்ள ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகின்றது. இராயப்பரும் மற்றவர்களும் யூத குருசபையின் முன் கொண்டுவரப்பட்டபோது கமாலியேல் அங்கிருந்தோரைப் பார்த்து பின்வருமாறு கூறினார். ''இவர்கள் திட்டமிட்டிருப்பதும் செய்து வருவதும் மனிதருடைய செயலாயிருந்தால், சிதைந்து போகும்.கடவுளுடையதாயின் நீங்கள் அவர்களைத் தொலைக்கமுடியாது, நாம் செய்வது இறைவனுடைய சொந்த வேலையாயின் உலகிலுள்ள எந்தச் சக்தியும் அதனை அழிக்கமுடியாது. ஆகவே நாம் அஞ்சத் தேவையில்லை. நாம் நம்பிக்கையுடன் முன்னோக்கிச் செல்லவேண்டும். தேவைப்படுவது என்னவெனில், இறைவனில் நிலையான விசுவாசமும், அவசியமானவற்றைச் செய்யவும். நாம் எதிர்கொள்ளும் இடையூறுகள் துன்பவேதனைகளை எமது நற்கருணைக் காணிக்கையாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்பதற்கு வேண்டிய துணிவும் மன உறுதியுமே.

திருத்தந்தையின் அழைப்பைச் செவிமடுத்து, இந்த மறைமாவட்டத்தில் எம்மைச் சூழ்ந்துள்ள சாத்தியக் கூறுகள், சவால்கள், இடர்ப்பாடுகளை நோக்கும்போது, மறைபோதகம் என்னும் தமது அடிப்படைக் கிறிஸ்தவ அழைத்தலைப்பற்றி திருச்சபைச் சமூகத்தின் எல்லாப் பகுதியினருக்கும் உணர்வூட்டுவதற்கு நடைமுறையில் என்ன முயற்சிகள் எடுக்கப்படலாம்? கிறிஸ்துவின் மீட்புச் செய்தியை இன்னும் அறியாத திரளான எமது சகோதரருக்கு எவ்வாறு ஒரு சிறந்த மறை போதகத் திட்டம் வகுத்து செயற்படுத்தப் படலாம்?

முதற் தேவைப்படுவது என்னவெனில், கத்தோலிக்கருக்கே மீண்டும் நற்செய்தி அறிவித்து, அவர்களிடத்திலல ஒரு வலுவான, தனிப்பட்ட மறைபோதக அர்ப்பணத்தைத் தூண்டுவதாகும். இதற்கு, நாம் எம்மையே நேர்மையுடன் பார்த்து, இம் மறைமாவட்டத்தில் பணிபுரியும் குருக்கள், துறவியராகிய நாம் எமது வேலையிற் காட்டும் அர்ப்பண மனப்பான்மை எமக்குத் திருப்திகரமாயுள்ளதா என்னும் வினாவை எழுப்புவதே நாம் முதற்செய்யவேண்டியதாகும். ஏனெனில் நாமும் நற்செய்தி பெறவேண்டியவர்களே.

எமது ஒன்றுமில்லாமையைப் பொருட்படுத்தாது, தமது அரசின் சேவைக்கு எம்மை அழைத்த இறைவன் மட்டிற்கொண்ட ஆழமான அன்பிலிருந்தே மறைபரப்பும் பணிக்கான அர்ப்பணம் தோன்றுகின்றது. தமது சொந்த மீட்புப்பணியில் நெருக்கமாகவும். உள்ளார்ந்த விதத்திலும் பங்குகொள்ளும் படிக்கு எமது உருவாக்ககாலத்தில் அவர் எம்மை அழைத்து, மறைப்பணிக்கு எம்மைத் தயார் செய்தார். ஆகவே, அவரிடம் ஓர் உறுதியான, நிலையான அன்பும், பற்றுதலும் இல்லாமல் மனப்பூர்வமான அர்ப்பணம் இருக்க முடியாது. எனவே இது ஆன்மீகத்தைப பொறுத்த ஒரு விடயமாகும். அர்ப்பணமானது, குருத்துவத்தின் திருவருட்சாதன இயல்பிலிருந்துமட்டும் வருவதில்லை; நாம் செய்யும் வாக்குத்தத்தங்களிலிருந்தும் வருவதில்லை; மக்களின் தேவைகளிலிருந்தும் வருவதில்லை. இவையெல்லாம் தற்செயலாக வந்த காரணிகளாகலாம். எம்மை, இறைவனோடும், இறைவனை எம்மோடும் பிணைக்கும் அன்புதான் எமது அர்ப்பணத்தின் மூல காரணமும் அதனை இயக்கும் சக்தியுமாகும்.

(மீகுதி அடுத்த இதழில்)

**வீட்டுக்கொரு பாதுகாவலன் · உங்கள்பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

# பட்டுப்பட்ட பாடு

**மணிக்கதை** — யாழ். ஜெயம்




சாதாரண இளைஞன் ஒருவனுக்குப் பிரபுவின் மகன் ஒருவன் நண்பனாயிருந்தான். இளைஞனுக்கு விவாகம் ஏற்பாடாகியிருந்தது. பெண் வீட்டார் அவனைப் பார்க்க வந்தனர்.

இளைஞன் விவாக ஏற்பாட்டை நண்பனிடம் கூறி அவனிடமிருந்து ஒரு பட்டு உடையை இரவலாக வாங்கி அணிந்திருந்தான்.

''மணமகன் அழகாயிருப்பதோடு பெரிய பணக்காரனாயுமிருக்கிறான்'' எனப் பெண் வீட்டார் பேசிக் கொண்டனர். மணமகனுடைய நண்பன் ''நீங்கள் கூறுவதுபோல மணமகன் பணக்காரன்தான். அவன் அணிந்துள்ள பட்டு என்னுடையது'' என்றான்.

அவர்கள் போன பிற்பாடு அந்த இளைஞன் தன் நண்பனிடம் ''நீ இப்படி உன்னுடைய பட்டு, என்று கூறியிருக்கலாமா?'' என்று கேட்டு மனம் வருந்தினான்.

''நீ வருந்தாதே! இனி நான் அவ்வாறு சொல்ல மாட்டேன்'' என்றான் நண்பன்.

அப்பொழுது, பெண்ணின் வேறு உறவினர்கள் மணமகனைப் பார்க்க வந்தனர். அவர்களும் ''மணமகன் சீமான்தான்' என்று பேசிக் கொண்டனர். அச்சமயம் இளைஞனின் நண்பன் ''நீங்கள் கூறியபடி இவர் சீமான்தான். இவர் அணிந்திருக்கும் பட்டும் இவருடையதுதான்'' என்றான்.

உறவினர்கள் சென்ற பிற்பாடு என்னையா இது? அவரவர் உடைகளை அவரவர் தானே அணிவார்கள் நீ கூறியது பட்டு என்னுடையதில்லை என்பதையல்லவா காட்டுகிறது. நான் படும் பாடு போதும்''. என்று இளைஞன் நண்பனிடம் வருந்திக் கூறினான்.

''சரி, சரி, இனிமேல் பட்டைப் பற்றியே நான் பேசவில்லை'' என்றான் இளைஞன்.

மூன்றாம் தடவையும் மணமகள் வீட்டிலிருந்து சிலர் மணமகனைப் பார்க்க வந்தனர்.

அவர்களும் மணமகனின் அழகுத் தோற்றத்தையும், ஐசுவரியத்தையும் பற்றி மெச்சிப் பேசினர்.

அவர்களிடம் வந்த நண்பன், ''நீங்கள் நினைப்பது போல அவர் பிரபுதான். ஆனால், அவர் அணிந்திருக்கும் பட்டைப் பற்றி நாம் ஏன் பேசவேண்டும்?'' என்றான்.

மணமகன் பட்ட பாட்டைச் சொல்ல வேண்டுமா?

# எங்கள் ஆலயப் புனிதர் விழா

ஆலயப் பக்கம் அறிந்திட மாட்டோம்,
ஆலயப் புனிதர் விழா வருமட்டும்.
விழாவுக்காக விசேட குருக்கள்,
விரைந்தே ஆலயம் வந்திடுவர்.
விதம் விதமான மறை உரை தன்னை,
வியந்து கேட்டு மகிழ்ந்திடுவோம்.
''விருந்தினை அவித்து விரயம் வேண்டாம்,
பட்டாசு கொழுத்திப் பயமுறுத்தாதீர்,
பொரித்த சோழம் தனை எறிந்து,
புனிதர் தன்னை அவமதியாதீர்.''
என்றே அறைந்து அவர்கள் சொல்வர். — ஆனால்
அத்தனையும் நாம் செய்திடுவோம்.
அத்துடன் சுரூபப் பவனிதனை,
எங்கள் பழைய பாடல்களால்,
தாமதித்திடுவோம் தப்பாமல்.
ஆலயப் புனிதர் விழாவதனில்,
நாங்கள் விரும்பும் 'அடியாள்தான்,'
வீணை மீட்டிட வேண்டுமன்றோ.
இளம் பங்குத் தந்தை இதில் குறுக்கிட்டால்,
'அலுப்புக்' கொடுப்போம் அவருக்கு.
எங்களை நீங்கள் மன்னிப்பீர்,
வருடம் ஒருமுறை மட்டுந்தான்,
வந்திடும் அடியார் யாமென்பதனால்.

வே. சாமுவேல்

# எழில்

எழில். விழுமியதோர் அழகிய சொல். ஏற்றமும், தோற்றமும் கொண்டது எழில் வாழ்வு. பொலிவும், பூரிபபும் கொண்ட காட்சி எழிற்காட்சி, இப்படி இன்பம் நிறை நிகழ்வுகளையும், தொழில்களையும் குறிக்க வருவதே ''எழில்''.

இயற்கைப் பித்துப்பிடித்த கவிஞனை நோக்கி 'எழில் எங்கே?' என்று கேட்டால் பூம்பொழில் என்பான்.

காதலன் தன் அன்புக் காதலியின் கனிந்த பேச்சே எழில் என்பான்.

அன்பின் வடிவான அன்னையிடம் கேட்டால், என் குழந்தையின் குறுநகையிலேதான் எழில் பொங்குகிறதுஎன்பாள்.

வாட்டும் வறுமையில் வருந்தும் வறியவன், எழிலை மரணதேவதையின் முகத்திலே பார் என்பான். பாட்டாளி எழில் மங்கையின் வனப்பை உழைப்பிலே கண்டு களிப்பான், ஈட்டியின் முனையிலே எழிலுண்டு என்பான் முரசொலியை எதிர்பார்க்கும் இளவீரன்.

குணமுள்ள நங்கை கணவனின் முன்னேற்றத்தில் எழிலைக் காண, ஆடம்பர நங்கை ஆபரணங்களில் எழிலைக் கண்டு அநுபவிப்பாள்.

மதுவிலும், மாதிலும் எழிலுண்டு என மதிமயங்கினான் உமர்கயாம்,-பாரசீகக் கவிஞன்.

'உண்மை வழியிலேதான் எழில் சுடர்விடுகிறது' என்கிறார் காந்தியடிகள்.

இளங்கோவும் எழிலைக் கண்டான் அரியணையிலா? அரசபதவியிலா? இல்லை. தனிமையிலே, தமிழின் இனிமையிலே, இறவாப் புகழ் பெற்ற துறவிலே எழிலைப் பருகினான்.

மலரும் வெண்ணிலவு குமுதத்துக்கு எழில்; செங்கதிரோன் செந்தாமரைக்கு எழில்; மாலைக்கு எழில் மயக்கும் தென்றல்; சோலைக்கு எழில் சுந்தரமலர்கள்; வாவிக்கு எழில் வண்ணக் கயல்மீன்கள்; அறிவுக்கு எழில் ஆழ்ந்த சிந்தனை; உயர்வுக்கு எழில் அயர்வற்ற உழைப்பு.

இவ்வாறு இறைவன் படைத்த இயற்கையின் எல்லாப் பொருள்களிலும் மறைந்தும் வெளிப்பட்டும், நிறைந்து நிற்கும் எண்ணரிய அழகுகளை ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொருவரும் காண்கிறோம்.

இறைவன் பேரெழிலையே இவற்றின் மூலம் நாம் கண்டு களிக்கின்றோம் என்பதை எண்ணிப் பார்க்கின்றோமா?.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 5<br>சுடர்: 3 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

**என்னகம் : 3**

**அன்புக் கண்மணிகாள்!**

குழந்தை யேசுவின் ஆசி என்றும் உம்முள் நிறைவதாக!

உங்கள் ஆக்கங்கள் இறையருளால் காக்கப்பெற்றன. கண்மணிகளின் அங்கத்துவம் 290 ஆக உள்ளதை இன்னும் அதிகரிக்க நாட்டின் சூழ்நிலைகள் மாற்றம் பெற்று, அஞ்சல் வழிகளும், அமைதி வழிகளும் ஆக்கமாக அமைய ஆண்டவனை வேண்டுங்கள்.

சென்ற வருடம் வந்த ஆக்கங்களை இப்பொழுது உங்களுக்கு அளித்துவருகிறேன். எல்லோருக்கும் உள்ளத்துள் ஒரு வகைச் சுமைகள் இன்னும் இருந்துகொண்டே இருக்கின்றன. இச்சுமைகளைச் சுகமாகத்தாங்கி இறை யேசு காட்டிய வழியில் வாழ எல்லாம் வல்ல தந்தையிடம் வேண்டுங்கள்.

அன்பின்
அன்பு விழி.

★ கூறுங்கள் பார்க்கலாம் : விடைகள்

(1) படி (2) மாலை (3) விடுகதை (4) திரை

★ துன்பத்தின் இருபக்கங்கள் எவை :

ஒருபக்கம் : உடலை வாட்டும், புலன்களைப் பொசுக்கும்; சுயமனதைச் சுடும்; செருக்கைக் கிளறும்; தற்கொலை செய்யத் தூண்டும்.

மறுபக்கம் : நம் மனதைத் தூய்மைப்படுத்தும்; உள்ளத்திற்கு உறுதி அளிக்கும்; இறைவனிடம் நம்பிக்கையை வளர்க்கும்; தாழ்ச்சியின் தேவையை உணர்த்தும்; வாழ்க்கை அனுபவம் என்ற பெரும் பயன் பெறச் செய்யும்.

**தாமஸ் அகெம்பிஸ் சிந்தனை**

இயல்பாக மனிதன் அறிவை விரும்புகிறான். ஆயினும் இறைபயம் இல்லாத அறிவால் என்ன பயன்?

தனது ஆன்மாவை மறந்து கோளங்களின் போக்கை ஆராய்ச்சி செய்யும் செருக்குள்ள விஞ்ஞானிகளை விட இறைவனுக்குப் பணி செய்து வாழும் குடியானவன் சிறந்தவன்.

தொகுப்பு : அன்பு விழி

**ஆக்கம்**

## உதவி செய்த கரம்

நீக்ரோ இளைஞன் ஒருவன் புகைவண்டியிலிருந்து இறங்கினான். இரண்டு சூட்கேசுகள் இரண்டு கைகளிலும் வைத்திருந்தான், அவை இரண்டும் பெரியவை, கனமானவை, அவற்றை அவன் மிகவும் கஷ்டப்பட்டுத் தூக்கிக்கொண்டு போனான்; இவ்வாறு சென்றுகொண்டிருக்கும் போது சூட்கேசுகளில் ஒன்றை வெள்ளைக் கரம் ஒன்று கேட்டது. சுமந்து கொண்டு வந்து கொடுப்பதாகச் சொன்னது. இவன் மறுத்தான்; வெள்ளையன் விடுவதாயில்லை. வீடுவரை கொண்டு வந்து கொடுத்துவிட்டுத்தான் சென்றான். அந்த இளைஞன் யார் தெரியுமா?

அவன்தான் அமெரிக்க ஜனாதிபதியாக பிற்காலத்தில் சேவையாற்றிய ரூஸ்வெல்ட் ஆகும்.

செல்வி ஜெனிவி தனபாலன் பெர்னாண்டோ
அங். எண் : 137

## — மர்மம் —

பிறந்த லென்பது என்னவாம்? — இப்
பூவை நுகர வருவதாம்
பிறந்த பின்னே என்னவாம் — வாழ்வுப்
போரி லீடு படுவதாம்
இறத்த லென்பது என்னவாம் — முற்றாய்
இவ்வுலகை நீத்துச் செல்வதாம்
இறந்த பின்னே என்னவாம்? — அஃது
இறை அறிந்த மர்மமாம்.

உ. இ. தமிழ்ச்செல்வன்

பாதுகாவலன்
PATHUKAVALAN

# கத்தோலிக்க எழுத்தாளர்களுக்கு கொழும்பு ஆயரின் ஆசியுரை

தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் உலக தொடர்பு தினமான ஜூன் 16 ஆம் திகதி ஒழுங்குசெய்த நிகழ்ச்சியொன்றில் பேசிய ஆயர் கோமிஸ் திருச்சபைக்கு எதிராக எழுப்பப்படும் தவறான கண்டனங்களுக்கு கத்தோலிக்க எழுத்தாளர் பதிலிறுக்க வேண்டுமென்று கூறினார்.

கத்தோலிக்க ஆயர் பேரவையின் பொதுச் செயலாளரான ஆயர் கோமிஸ் எழுத்தாளர் சங்கத்தின் போஷகராவார்.

கத்தோலிக்கர் பொருளுதவி செய்து பிறரை மதம் மாற்றுகின்றனர் என அண்மையில் எழுப்பப்பட்ட குற்றச் சாட்டைக் குறிப்பிட்ட ஆயர் நாட்டில் பல்வேறு மதத்தினரிடையே நிலவும் நல்லுறவை இது சீர்குலைக்கலாம் எனக் கூறினார்.

இவ்வாறு மதம்மாற்றுபவர்கள் அடிப்படைவாதக் குழுக்களேயென்றும் 50க்கு மேற்பட்ட இத்தகைய குழுக்கள் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து பொருளுதவி பெற்று செயற்படுகின்றனரென்றும் கத்தோலிக்கருக்கும் பிற கிறிஸ்தவருக்கும் வேற்றுமை காணமுடியாத பிறமதத்தவர் கத்தோலிக்கரைக் குற்றம் சாட்டுகின்றனர் என்றும் ஆயர் கூறினார்.

தொடர்பு சாதன விடயங்களை பரிசீலனை செய்யவும், கத்தோலிக்கர் நலனுக்கு இடையூறான தகவல்களை சேகரிக்கவும் தவறான தகவல்களுக்கும் குற்றச் சாட்டுகளுக்கும் பதிலிறுக்கவும் சங்கத்தினால் ஒரு விழிப்புக்குழு நியமிக்கப் பட்டது.

பிதா ஜூட் பெர்னான்டோ எழுதிய ''தாகத்திற்கு நீர்'' என்னும் நூல் இவ்வாண்டின் சிறந்த கத்தோலிக்க நூல் எனத் தெரிவு செய்யப்பட்டது.

இவ்வாண்டின் சிறந்த கிறிஸ்தவ புலவராக றிச்சேட் வசந்த குமார் தெரியப்பட்டார்.

## கலப்பு மணத்தால் சாதி ஒழிப்பு

(யூக்கன் செய்தி)

கலப்பு மணத்தின் மூலம் சாதி வேற்றுமையை ஒழிக வேண்டுமென டாக்டர் அம்பேத்காரின் மனைவியான சாரதா கபீர் அம்பேத்கார் கலப்புமணத் தம்பதியருக்கு நடந்த கருத்தரங்கொன்றில் கூறியுள்ளார். பிராமண குலத்தைச் சேர்ந்தவரும் 67 வயதானவருமான இந்த அம்மையார் மாய் அம்பேத்கார் என மக்களால் அழைக்கப்படுகின்றார்.

இந்த ஆண்டு அம்பேத்காரின் நூற்றாண்டு நிறைவாகும். இவர் இந்துமதம் கடைப் பிடிக்கும் தீண்டாமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக 1956 ஆம் ஆண்டில் 3000,00 ஹரிஜன மக்களுடன் பௌத்த சமயத்தை ஏற்றுக் கொண்டார்.

மாய் அம்பேத்கார் கலப்புத் திருமணம் செய்யுமாறு தமது பிள்ளைகளை ஊக்குவிக்குமாறு பெற்றோரைக் கேட்டுக் கொண்டார்.

அரசாங்கப் படிவங்களில் சாதி மதம் பற்றிய விபரங்கள் கோரும் பகுதி ஒழிக்கப்பட வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினார்.

இந்தியாவில் பெரும்பான்மையினரான இந்துமதத்தினர் ஏறக்குறைய 3000 சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர்.

முன்னாள் இந்துக்களான கிறிஸ்தவரும், முஸ்லீம்களும் சாதிப்பிரிவினையைப் பின்பற்றுபவர்களாய் இலகுவில் கலப்பு மணம் செய்வதில்லை.

## நினைவு நாளன்று சர்வமத ஒன்றுகூடல்

சுவாமி அமலோற்பவதாஸ் நினைவுநாளாகிய மே. 25ஆம் திகதி மைசூரிலுள்ள அஞ்சலி ஆச்சிரமத்தில் சர்வமதக் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. மைசூர் பல்கலைக் கழகத்திலிருந்தும் வேறு பல நிறுவனங்களிலிருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட சிந்தனையாளர்கள் இக்கூட்டத்திற் கலந்துகொண்டனர். சுவாமி அமலோற்பவதாஸ் மைசூர் பல்கலைக் கழகத்தின் கிறிஸ்தவத்துறைப் பேராசிரியராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிதா அமலோற்பவதாஸின் கல்லறை இருக்கும் மண்டபத்தில் சகல மதங்களின் சின்னங்களும் புனித நூல்களும் வைக்கப்பட்டுள்ளன.

பிறமதங்களுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு இந்திய ஆன்மீக முறைப்படி 12வருடங்களுக்கு முன் சுவாமி அமலோற்பவ தாஸினால் அஞ்சலி ஆச்சிரமம் அமைக்கப்பட்டது. 1986 முதல் இருவகையான கூட்டங்கள் இங்கு நடைபெற்று வருகின்றன. முதலாவது சிந்தனையாளர்களுக்கானது. இதில் ஐந்து மதங்களைச் சேர்ந்த 13 பேர் உள்ளனர்.

மற்றக் கூட்டம் பொதுமக்களுக்கானது. சுமார் 250 பேர் பஜனை, உபதேசம் ஆகியவற்றில் பங்குகொள்ளுகின்றனர்.

## தொழுநோயாளர் மத்தியில் கத்தோலிக்க தாதியின் பயிற்சி

புளோறஸ் தீவில் 33 ஆண்டுகளாக தொழுநோயாளருக்குச் சேவை செய்த இசபெலா டயஸ் கொன்சாலேஸ் என்னும் தாதிக்கு இந்தோனேசிய அரசாங்கம் விருது வழங்கியிருக்கிறது.

''அன்பு உள்ளத்துடன் தொழுநோயாளருக்குப் பணி செய்த இவர் விவாகம் செய்யாதவரானாலும் நூற்றுக் கணக்கானோரால் ''அம்மா'' என அழைக்கப்படுகிறார்,'' என விருது வழங்கிய பிலிப்புஸ் றிபேரு கூறினார்.

1959இல் ஒரு பிரசவ, குழந்தை வைத்திய நிலையத்தை ஆரம்பித்த இசபெலா பின்னர் தொழுநோயாளரையும் அங்கு அழைத்து சிகிச்சை அளிக்கலானார். நோயாளர் தொகை அதிகரித்தபோது இடநெருக்கடி ஏற்பட்டதுடன் ஊழியர்களும் தேவைப்பட்டனர். 1966 ஒரு ஜேர்மன் நிறுவனத்தின் உதவியால் அங்கு ஒரு வைத்தியசாலை எழுப்பப்பட்டது. இரு ஐரோப்பிய வைத்தியர்களும் ஒரு தாதியும் பணியாற்ற வந்தனர்.

தன்னால் வைத்தியசாலையை நிர்வகிக்க முடியாததால் அதனைத் துறவறக் கன்னியரிடம் ஒப்படைத்து விட்டு இஸபெலா அங்கு தொடர்ந்து தாதியாக பணியாற்றி வந்தார். அவர் தொழுநோயாளரின் உடல், உளப் பிணிகளை குணப்படுத்தி அவர்களை தங்கள் குடும்பங்களுக்குத் திருப்புவதற்குத் துணைபுரிந்ததோடு தொழுநோய் பற்றிய மக்களின் பிழையான மனப்பான்மையையும் மாற்ற முடிந்தது.

## பெண்கள் நிலைபற்றி கவலை

புதுடெல்லியிலுள்ள இந்திய சமூக நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்திப் பிரிவிற்குத் தலைமைவகிக்கும் அருட் செல்வி ஷாலினி டிசூசா இந்திய சமுதாயம் பெண்களை ஆண்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாக வைத்திருந்துள்ளது. பழைமையான இந்திய சட்ட நூலாகிய மனுஸ்மிருதி பெண்களை இழி குலத்தவரோடு சமப்படுத்துகின்றது என்று கூறினார்.

ஐரோப்பாவிலிருந்து வருகை தந்திருந்த ஓர் இளைஞர் குழுவுக்கு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார். மேலும் அவர் கூறியதாவது.

''திருச்சபையும் பெண்கள் உரிமைபற்றி வெறும் வாய்ப் பந்தல்தான் போடுகிறது. பெண்களே சில சமயம் பெண்களின் துன்பத்திற்கு காரணமாகின்றனர். அதிக சீதனம் கேட்டு தமது மருமக்களைத் துன்புறுத்து கின்றனர்.

பெண்களின் சனத்தொகையும் 1000 த்துக்கு 929 எனக் குறைந்துள்ளது. பெண் சிசுக் கொலையும் கருவழிப்புமே இதற்குக் காரணம். சீதன முறை காரணமாக பெண் குழந்தை ஒரு நஷ்டமாகக்கருதப்படுகிறது.''

## 23 ஆவது நினைவு தினத் திருப்பலி



அருள் தந்தை
பியோ

தோற்றம்
25–05–1887

மறைவு
23-09-1968

அருள் தந்தை பியோ அவர்களுக்கு விரைவில் முத்திப்பேறு பெற்ற பட்டம் கிடைப்பதற்காகவும், அவர் மூலம் பிதாவிடம் எங்களுக்கு அமைதி நிலவ வேண்டுமென்றும் புனித மரியன்னை பேராலயத்தில் காலை 6 00 மணியிலும், அருள் ஆச்சிரமம் மாலை 5.30 மணியிலும், புனித யாகப்பர் ஆலயம் காலை 5.45 மணியிலும் ஒப்புக்கொடுக்கப்படும் திவ்விய பலி பூசைகளில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அருள் தந்தை மூலம் பெற்ற நன்றியறிதல் கடிதங்களைக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

392, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## பொதுநிலையினர் கல்விநிலையத்தை வத்திக்கான் அங்கீகரித்துள்ளது

உயர்கல்விக்கான வத்திக்கான் அலுவலகம், சங்கணாச்சேரியிலுள்ள சமய இயலில் பொதுநிலையினர் உயர்கல்வி பெறும் நிறுவனமாகிய மார் தோமா வித்தியா நிகேதனுக்கு உத்தியோகபூர்வமான அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்தியாவில் பொதுநிலையினருக்கான ஓர் உயர்கல்வி நிலையம் வத்திக்கானால் அங்கீகரிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

வடவத்தூர் புனித தோமையார் குருமடத்தின் பௌரஸ்திய வித்தியா பீடத்தினால் போஷிக்கப்பட்டு வரும் இந்தக் கல்வி நிலையம் 1990ஜூலை 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படும் 25 பேருக்கு நாலாண்டுப் பயிற்சியும், இறுதியில் பட்டமும் வழங்கப்படுகின்றன. சனி, ஞாயிறு நாட்களிலும், பொது விடுமுறைகளிலும் வகுப்புகள் நடத்தப்படுகின்றன

## அலுவலகம் மாற்றம்

ஆசிய ஆயர் பேரவையின் கிறிஸ்தவ ஒன்றிப்பு, சர்வமத உரையாடல் அலுவலகம் தாய்வானிலிருந்து ஜூலை 12ஆம் திகதி பாங்கொக்கிற்கு மாற்றப்பட்டது.

இந்த நிறுவனத்தின் புதிய தலைவரான ஆயர் ஜோண்பொஸ்கோ மானத் சுவாப்சமாய் புதிய அலுவலகத்தை ஆசீர்வதித்தார்.

சர்வமத உரையாடல் அலுவலகம் ஆசியாவில் கிறிஸ்தவ ஒன்றிப்பையும், சர்வமத உரையாடலையும் ஊக்குவிக்கத் தாய்ப்பேயில் 1978ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

## மரண ஞாபக அறிவித்தல்

புரட்டாதி– 18

மரிய பாக்கியம் செபஸ்தியாம்பிள்ளை
3 ஆம் ஆண்டு நிறைவு அஞ்சலி.

சீவியத்தில் நினைத்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்.

கணவன்- பிள்ளைகள்
அருட் சகோதரிகள் M. அகும்ரீனா (A. C.)
மரிய கொறட்டி (S. C. J. M) A/31/91

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81